செல்வி கோ. மல்லிகா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாதியற்றவர்களுக்கு நம்பிக்கை நட்சத்திரமாய் தாழ்த்தப்பட்டவர்கள் தாகத்தைத் தீர்க்க வந்த தன்னிகரில்லா தலைவியாய் ஆதிதிராவிட மக்களின் உள்ளங்களில் குடிகொண்டு இருக்கும் அன்புத் தாயாக விளங்கும் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சிக் காலத்தில் ஆதிதிராவிட மக்கள் வீட்டுமனைப்பட்டா பெற்று புதுவாழ்வு பெற்றுவரும் சூழ்நிலையில் என் தொகுதியிலுள்ள கள்ளிக்காட்டு காலனி மக்களுக்கும் விரைவில் வீட்டுமனைப்பட்டா வழங்கிட தேவையான நடவடிக்கைகளை துரிதப்படுத்தி மேற்கொள்ள அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிதம்பரம் வட்டம், மேல் புவனகிரி கிராமத்தில் உள்ள கள்ளிக்காட்டுக் குடியிருப்பு ஆதிதிராவிட மக்களுக்கு மனைப்பட்டா விரைந்து வழங்குவதற்காக முன்மொழிதல் தயாரித்து அனுப்பவேண்டுமென்ற கோரிக்கையை விரைந்து அனுப்ப வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இருக்கிறோம். அந்த வகையிலே விரைந்து பணிகள் முடிக்கப்படும். இப்படி விரைந்து பணிகள் முடிக்கப்பட்டுக்கொண்டிருக்கின்ற காரணத்தினாலேதான் 1994 -95 ஆம் ஆண்டு ஆதி திராவிட மக்களுக்காக வழங்கப்பட்ட மனைப்பட்டாக்கள் 1,88,971 வழங்கப்பட்டிருக்கினறன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

செல்வி கோ. மல்லிகா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலம் கையகப்படுத்தும் பணி துவங்கப்பட்டுவிட்டதா? அதில் ஏதேனும் தடங்கல் உள்ளதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலம் கையகப்படுத்தும் பணி துவங்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 500, திருமதி கவிநிலவு தர்மராஜ், மாண்புமிகு கதர்த்துறை அமைச்சர்.

500—

மொடக்குறிச்சி தொகுதியில் தொழிற்கூடம் தொடங்குதல்

*34176—**திருமதி கவிநிலவு தர்மராஜ்:**

மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

1995 ஏப்ரல் 28]

(அ) மொடக்குறிச்சி தொகுதியில் கதர்த் துறையின் மூலம் காலணி தயாரிப்புக் கூடம், சோப்பு உற்பத்தி அலகு, ஊதுபத்தி தயாரிக்கும் கூடம் ஆகியவை தொடங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு பி. ஈஸ்வரமூர்த்தி, கதர்த்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் *(ஆ)* : .பெரியார் மாவட்டம், மொடக்குறிச்சித் தொகுதியில், மொடக்குறிச்சி பகுதியில் காலணி தயாரிக்கும் கூடமும், சோப்பு உற்பத்தி அலகும், ஊதுபத்தி தயாரிக்கும் கூடமும் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். ஏற்கெனவே மொடக்குறிச்சியில் ஒரு சோப்பு உற்பத்தி அலகு செயல்பட்டுக் கொண்டு வந்திருக்கிறது. மேலும் காலணி தயாரிப்புக் கூடமும் ஊதுபத்தி தயாரிப்புக் கூடமும் அமைப்பதற்கு வாய்ப்பு இல்லை.

முற்பகல் 11–10

திருமதி கவிநிலவு தர்மராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொடக்குறிச்சி தொகுதியைப் பொறுத்தவரை அலகுகளை ஆல்பத்திலேயும் தொழிற்சாலைகளை தொலைக்காட்சிப் பெட்டியிலுமே பார்த்துக் கொண்டிருக்கின்ற ஒரு கிராமப்புறமான மக்களை கொண்டிருக்கின்ற தொகுதியாக இருக்கிறது. சோப்புத் தொழில் மொடக்குறிச்சித் தொகுதியிலே இயங்கினாலும் ஒரு சிறிய வீட்டிலே ஒரு குடிசைத் தொழில்போல் அது இயங்கிக் கொண்டு இருக்கிறது. இப்படிப்பட்ட சோப்புத் தொழில் கூடத்தை விரிவுபடுத்தவும், ஊதுபத்தி தொழில் கூடம் மற்றும், நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவியினுடைய அரசிலே, காலணி தயாரிக்கக்கூடிய கூடத்தையும், மொடக்குறிச்சியிலே அமைத்துக் கொடுப்பார்களானால், ஆதிதிராவிட மக்களை அதிகம் பெற்றறிருக்கிற அந்தப் பகுதி மக்களுக்கு ஒரு நல்ல தொழில் வாய்ப்பாகவும் இது அமையக்கூடிய விதத்தில் இருக்கிற காரணத்தினால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் காலணி தைத்துக் கொடுக்கக்கூடிய கூடத்தையும், இந்த சோப்புக் கூடத்தை விரிவுபடுத்தக்கூடிய திட்டத்தையும், பெண்கள் எல்லாம் பயன்படக்கூடிய விதத்திலே, பெண்களுக்கு பெருமைத் தேடி தரக்கூடிய விதத்திலே காரியங்களை நடத்திக்கொண்டிருக்கிற இதய தெய்வம் புரட்சித் தலைவியினுடைய ஆட்சியிலே பெண்கள் சிறுதொழிலாகக் கொண்டிருக்கிற ஊதுபத்தி தயாரிக்கக்கூடிய ஒரு கூடத்தையும் அவர்கள்

ஏற்படுத்தித் தருவார்களா, அந்தச் செயற்குறிப்பு அவர்களிடம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பி. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோப்பு தயாரிக்கும் அலகானது குடிசைகளிலே குடிசைத் தொழிற்போல் நடந்து வருகிறது என்று சொன்னார்கள். தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் மூலம் செய்யப்படக்கூடிய அனைத்துத் தொழில்களும் குடிசைத் தொழில்கள் தான், குடிசைகளிலே இருக்கக்கூடிய அந்த ஏழை எளிய மக்களுக்காகத் தான் வாரியத்தில் இதுபோன்ற தொழில்கள் எல்லாம் செய்யப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கடைசியிலே சொன்னதுபோன்று, அதை விரிவாக்கம் செய்வதற்கு வேண்டுமானால் அதற்கு ஆவன செய்யப்படும். ஆனால், ஊதுபத்தி தயாரிக்கக்கூடிய கூடம் ஒன்று அமைக்க வேண்டுமென்று கேட்டார்கள். ஊதுபத்தி தயாரிப்பதற்கு மூங்கில் மூலப்பொருளாக தேதவைப்படுகிறது. மலைப் பகுதியாக இருந்தால் அங்கு எளிய முறையிலே அந்த மூங்கில் போன்றவைகள் கிடைப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. மொடக்குறிச்சி பகுதி மலைப்பகுதி அல்ல. நல்ல வளமான நெல் விளையக்கூடிய பகுதியாக இருக்கிறது. அங்கு மூங்கில் போன்ற மூலப்பொருள் கிடைப்பதற்கு வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது. ஆகவே, ஊதுபத்தி தயாரிக்கக்கூடிய கூடம் அமைப்பதற்கு வாய்ப்பு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி கவிநிலவு தர்மராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “நோய்நாடி நோய்முதல் நாடி அது தணிக்கும் - வாய்நாடி வாய்ப்பச் செயல்” எனபதை அறிந்து யாருக்கு எந்த சேவை செய்ய வேண்டுமோ, யாருக்கு என்ன தேவையோ, யார் யாருக்கு என்ன சிகிச்சை அளிக்கப்பட வேண்டுமோ, அதை எல்லாம் உணர்ந்து செயல்படுத்திக் கொண்டிருக்கிற இதயதெய்வத்தினுடைய ஆட்சியிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாடக்குறிச்சி தொகுதியிலே மலைப்பகுதி இல்லை என்று சொன்னார்கள். அரச்சலூர், நாகமலை போன்ற இடங்களிலே மூங்கில் பயிராகிக் கொண்டிருக்கிறது. கொடுமுடி ஆற்றோரங்களில் அத்தனைப் பகுதிகளிலும் நம்முடைய சமூக நலத்துறை காடுகளின் வசம் நிறைய மூங்கில்கள் பயிர் செய்துகொண்டிருக்கிறார்கள். தேவையான மூங்கில்களைக் கொடுப்பதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து எப்படியாவது ஒரு ஊதுபத்தி தொழில் கூடத்தையாவது என்னுடைய தொகுதிக்குப் பெற்றுத் தருவதற்கு ஆவன செய்வாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

1995 ஏப்ரல் 28]

மாண்புமிகு திரு பி. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனப் பகுதியில் இருக்கக்கூடிய மூங்கில்களை சட்டமன்ற உறுப்பினர்கள் பார்த்து கொடுத்தாலும் கொடுக்க முடியாது. நாங்களே பார்த்து எடுப்பதற்கும் வாய்ப்பு இல்லை. அதை வனத் துறையினுடைய அனுமதி பெற்று தான் பெறக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. சமீப காலத்திலே, கடந்த 3 ஆண்டுக் காலமாக, வனத் துறையிலிருந்து மூங்கில் பெறுவதற்கு கதர் கிராமத் தொழில் வாரியத்தின்மூலம் மிகக் கடுமையான முறையிலே நாங்கள் போராடி அதைப் பெற்றிருக்கிறோம். அதேபோன்று, ஆற்று படுகையிலே இருப்பதாகச் சொன்னார்கள். அதை பொதுப் பணித்துறையிலே இருந்துபெற்று தான், அவர்களுடைய அனுமதியோடு தான் பெறுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அதை எளிய முறையிலே பெறுவதற்கு வாய்ப்பு இல்லை. நாங்கள் ஏற்கெனவே முயற்சி செய்திருக்கிறோம். இருந்தாலும் முயன்றுகொண்டே இருக்கிறோம். அது சாத்தியப்படக்கூடிய நேரத்திலே, இது போன்ற தொழில் கூடம் அமைப்பதற்கு வாரியத்தின்மூலம் ஏற்பாடு செய்யப்படும் எனபதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

482—

மருவத்தூரில் மருத்துவமனை அமைத்தல்

**26745—திரு. ஆர். தங்கராஜ்:*

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆண்டிமடம் தொகுதி, மருவத்தூர் கிராமத்திற்கு பகுதி நேர மருத்துவமனை அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

இல்லை.

492—

சுண்ணாம்புக்கல் வெட்டுவதற்குத் தடை

***25958—திருமதி ரமணி நல்லதம்பி:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், ராதாபுரம் தொகுதியில் இடிந்தகரை பகுதியில் இந்தியா சிமெண்டு நிறுவனம்